**Press Release**

**10th T.N.P.L. Workers  Wages Revision Agreement**



The 10th Workers' Wage Revision Agreement (2022-2026) for Tamil Nadu Newsprint and Paper Limited, a top-performing Public Sector Enterprise of the Tamil Nadu Government, was signed on November 27, 2023. The signing took place in the presence of Hon'ble Minister of Industry, Investment Promotion, and Commerce, Dr. T. R. B. Raaja, Dr. M. Saikumar, Chairman and Managing Director of Tamil Nadu News Paper Company, Mr. M. Shanmugam, Member of Parliament and General Secretary of L.P.F., Mr. R. Kamalakannan, Secretary of Anna ThozhilSangaPeravai, and Mr. T.K. Rangarajan, Ex-Member of Parliament and Honorary Adviser to TNPL ThozhilalarSangam. The wage revision agreement was unanimously signed by the three recognized unions.

**Key Highlights of the Historic Wage Revision Agreement:**

1) The revised pay has been fixed by applying a 30 percent increase to the basic pay.

2) The annual pay increment has been fixed at 3 percent of the basic pay.

3) The Variable Dearness Allowance has been increased to 0.29 percent, and its ceiling has been raised to Rs. 63/-.

4) Employees who joined in 2015 will also receive a Fixed Dearness Allowance (FDA).

5) The House Rent Allowance has been set at 12% for workers in factory accommodation and 15% for other employees.

6) Significant increase has been set across all allowances compared to the previous nine agreements.

7) 100% reimbursement under the employee medical assistance program has been extended to include liver and pancreas diseases as critical illnesses.

8) Maternity leave granted to women workers will be considered in the calculation of LTC

9) A service weightage will be granted to those who complete 33 years of service.

10) Relaxation of three years in the promotion slabs will be provided for those in grades 4, 5, and 6.

11) Workers holding a graduation degree and having 20 years of service will be eligible for one upgradation.

12) In the event of the demise of workers in service, whether due to accident or natural causes, employment will be offered to their legal heirs on compassionate grounds.

Hon'ble Minister of Industry, Investment Promotion and Commerce in his keynote address mentioned that 600 contract workers have been given permanent job appointment orders as per the order of the Hon'ble Chief Minister of Tamil Nadu, which is a long-standing demand of the contract workers. Also, a surprising announcement was made to provide subsidized lunch to around 4000 contract workers.

On this occasion, Mr. R. Srinivasan, Executive Director (Operations)-in-charge of Tamilnadu Newsprint Company, Mrs. SathyaAnand, Chief General Manager (Finance), Mr. K. Kalaiselvan, General Manager (Human Resource Departmen) and other TNPL officials were present.

27/11/2023

# <u>10வது டி.என்.பி.எல். தொழிலாளர்ஊதியஉயர்வுஒப்பந்தம்</u>



தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வரும், தமிழ்நாடு செய்தித்தாள் காகிதநிறுவனத்தின். 10வது தொழிலாளர் ஊதிய உயர்வு ஒப்பந்தம்(2022-2026) 27.11.2023 அன்று, மாண்புமிகு தொழில்துறை, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வணிகம் அமைச்சர் முனைவர் திரு.டி.ஆர்.பி.ராஜா அவர்கள் தலைமையிலும், தமிழ்நாடு செய்தித்தாள் காகிதநிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் திரு.எம்.சாய்குமார், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையிலும் மற்றும் திரு.எம்.சண்முகம், பாராளுமன்ற உறுப்பினர், பொதுச்செயலாளர், தொழிலாளர் முன்னேற்றசங்கப்பேரவை, திரு.ஆர்.கமலக்கண்ணன், செயலாளர், அண்ணாதொழிற்சங்க பேரவை மற்றும் திரு.டி.கே.ரங்கராஜன், முன்னாள்பாராளுமன்றஉறுப்பினர், கௌரவஆலோசகர், டி.என்.பி.எல். தொழிலாளர் சங்கம் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின்படி மூன்று தொழிற்சங்கங்களும் ஒருமித்தகருத்துடன் ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் கை யெழுத்திட்டனர்.

**வரலாற்றுசிறப்புமிக்கஊதியஉயர்வுஒப்பந்தம்-சிறப்பம்சங்கள்:-**

1) அடிப்படைச்சம்பளத்தில் 30சதவீதம்உயர்த்தி, திருத்தியமைக்கப்பட்டஊதியம்நிர்ணயிக்கப்பட்டது.

2) வருடாந்திரஊதியஉயர்வு, அடிப்படைச்சம்பளத்தில் 3சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டது.

3) மாறும்அகவிலைப்படி0.29சதவீதமாகவும், அதன்உச்சவரம்பு ரூ.63/-ஆக உயர்த்தப்பட்டது.

4) 2015ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்ததொழிலாளர்களுக்கும் மாறா அகவிலைப்படி(FDA) வழங்கப்படும்.

5) வீட்டுவாடகைப்படி, ஆலைக்குடியிருப்பில்உள்ளபணியாளர்களுக்கு 12 சதவீதமாகவும், ஆலைக்குடியிருப்பில் இல்லாத பணியாளர்களுக்கு 15 சதவீதமாகவும் நிர்ணயம் செய்யப்பட்டது.

6) அனைத்து(கொடுப்பனவுகள்) அலவன்ஸ்களிலும்சென்ற 9 ஒப்பந்தங்களை காட்டிலும் நல்ல உயர்வு நிர்ணயிக்கப்பட்டது.

7) தொழிலாளர்களுக்கு100% ஈடு செய்யப்படும் தீவிர நோய்களின்பட்டியலில் கல்லீரல் மற்றும் கணைய நோய்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

8) பெண் ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் பேறுகாலவிடுப்பு, LTC விடுமுறைகணக்கிடுதலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

9) 33 வருடம் நிறைவு செய்தவர்களுக்கு சர்வீஸ் வெயிட்டேஜ் கொடுக்கப்படும்.

10) பணி உயர்வில்4,5 மற்றும் 6வது கிரேடுகளில் 3 ஆண்டுகள் தளர்வு, கொடுக்க நிர்ணயிக்கப்பட்டது.

11) பட்டம்படித்து வேலையில் சேர்ந்து, 20 ஆண்டுகள் பணி செய்தவர்களுக்கு 1 படிநிலை பணி உயர்வு கொடுக்க நிர்ணயம் செய்யப்பட்டது.

12) ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் பணிக்காலத்தில் இறக்கநேரிட்டால் (விபத்து மற்றும் இயற்கைமரணம்) அவர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

மாண்புமிகுதொழில்துறை, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வணிகம் அமைச்சர் அவர்களின்சிறப்புரையில், ஒப்பந்த தொழிலாளர்களின் பல ஆண்டுகால கோரிக்கையான, ஒப்பந்ததொழிலாளர்களை பணிநிரந்தரப்படுத்துதல் என்பது தமிழக அரசின் முதல்வரின் ஆணையின்படி, 600 தொழிலாளர்களுக்கு நிரந்தரப்பணி ஆணைவழங்கப்பட்டது என்று குறிப்பிட்டார். மேலும், சுமார் 4000 ஒப்பந்த தொழிலாளர்களுக்கு மதிய உணவு வழங்கும் அறிவிப்பும் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்)-பொறுப்பு திரு.ஆர்.சீனிவாசன், முதன்மைபொதுமேலாளர்(நிதி) திருமதி.சத்யாஆனந்த், மனிதவளத்துறை பொதுமேலாளர் திரு.கா.கலைச்செல்வன் மற்றும் மனிதவளத்துறை & நிதித்துறையைச் சார்ந்த அதிகாரிகள் உடனிருந்தனர்.
••••••••••

## 10TH T.N.P.L. WORKERS WAGES REVISION AGREEMENT



The 10th Workers' Wage Revision Agreement (2022-2026) for Tamil Nadu Newsprint & Paper Limited, a top-performing Public Sector Enterprise of the Tamil Nadu Government, was signed on November 27, 2023. The signing took place in the presence of Hon'ble Minister of Industry, Investment Promotion, & Commerce, Dr. T. R. B. Raaja, Dr. M. Saikumar, Chairman and Managing Director of Tamil Nadu News Paper Company, M. Shanmugam, Member of Parliament and General Secretary of L.P.F., R. Kamalakannan, Secy. of Anna Thozhil Sanga Peravai, & T.K. Rangarajan, Ex-Member of Parliament & Honorary Adviser to TNPL Thozhilalar Sangam. The wage revision agreement was unanimously signed by the three recognized unions.

**Financial express -Dated 1-12-2023**

## TNPL employees to get 30% hike on basic salary

**The Hindu Bureau**
CHENNAI

The State government on Monday signed an agreement with major labour unions of the Tamil Nadu Newsprint and Paper Limited (TNPL) on 13 decisions, which included a 30% basic salary hike for permanent employees.

Minister for Industries T.R.B. Rajaa, in a post on X (formerly Twitter), said the 30% basic salary hike for permanent employees was the highest ever wage revision since its inception. He added that leave travel concession benefits could now be availed of by women employees during their maternity leave as well.

Among the key decisions taken at the 10th TNPL Employees Salary Hike Agreement were 100% medical expense reimbursement for ailments, including pancreatic and liver diseases, and auto-promotion of graduates with 20 years of service in the TNPL.

He said more than 600 contract workers were made permanent employees, which was over a decade-long request of the employees.

Along with the permanent staff, the 4,000-odd contract workers would also receive free lunch, he said in the post.

According to a press release, the annual increment was fixed at 3% of the basic salary and house rent allowance was fixed at 12% for employees residing in the factory accommodation and 15% for others. Those who have completed 33 years in service would receive service weightage.

In case of death of employees (accidental or natural) during service, their heir would be given employment.

**The Hindu dated 28-11-2023**

## டி.என்.பி.எல்., பணியாளருக்கு 30 சதவீதம் ஊதிய உயர்வு

**சென்னை, டிச. 1–**

டி.என்.பி.எல்., எனப்படும், தமிழக அரசின் செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு, கரூர் மாவட்டம், காகிதபுரத்தில், அச்சு மற்றும் எழுது காகிதம் தயாரிக்கும் ஆலையும்; திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகில் காகித அட்டை தயாரிக்கும் ஆலையும் உள்ளன.

அந்த ஆலைகளில், 1,500க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிகின்றனர். அவர்களுக்கு நான்கு ஆண்டுகளுக்கு, ஒரு முறை ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது. அதன்படி, 2022 மே முதல் புதிய ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

சென்னை கிண்டியில் உள்ள தலைமை அலுவலகத்தில், 10வது ஊதிய உயர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்ச்சி, தொழில் துறை அமைச்சர் ராஜா தலைமையில், டி.என்.பி.எல்., நிறுவன தலைவர் சாய்குமார் முன்னிலையில், கடந்த மாதம் 27ல் நடந்தது.

ஒப்பந்தத்தில் மூன்று தொழிற்சங்க நிர்வாகிகள் கையெழுத்திட்டனர். புதிய ஊதிய உயர்வு ஒப்பந்தப்படி, அடிப்படை சம்பளத்தில், 30 சதவீதம் உயர்த்தி, புதிய ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

ஆண்டு ஊதிய உயர்வு, அடிப்படை சம்பளத்தில், 3 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

வீட்டு வாடகைப்படி, ஆலை குடியிருப்பில் உள்ள பணியாளர்களுக்கு, 12 சதவீதமாகவும்; மற்றவர்களுக்கு, 15 சதவீதமாகவும் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

**Dinamalar Dated 01-12-2023**

## TNPL workers' wages revised

**Chennai:** Employees of the state owned Tamil Nadu Newsprint and Paper Limited (TNPL) will get a 30% hike to their basic salary. This was part of the 10th workers' wage revision agreement (2022-2026) signed between TNPL and three recognised trade unions on Monday.

A statement here said, significant increase has been set across all allowances compared to the previous nine agreements. The revised pay has been fixed by applying a 30% increase to the basic pay. The annual pay increment has been fixed at 3% percent of the basic pay.The agreement was signed in the presence of industries minister T R B Raaja, TNPL CMD M Saikumar and representatives from unions. TNN

**Times of India dated 29-11-2023**

Murasoli
29-11-2023



தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வரும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின், 10-வது தொழிலாளர் ஊதிய உயர்வு ஒப்பந்தம் (2022-2026) 27.11.2023 அன்று, தொழில்துறை, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வணிகம் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையிலும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் எம்.சாய்குமார் முன்னிலையிலும் மற்றும் எம்.சண்முகம், பாராளுமன்ற உறுப்பினர், பொதுச் செயலாளர், தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை, ஆர்.கமலக்கண்ணன், செயலாளர், அண்ணா தொழிற் சங்க பேரவை மற்றும் டி.கே.ரங்கராஜன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், கௌரவ ஆலோசகர், டி.என்.பி.எல். தொழிலாளர் சங்கம் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின்படி மூன்று தொழிற்சங்கங்களும் ஒருமித்த கருத்துடன் ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

### அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தலைமையில்

## டி.என்.பி.எல். தொழிலாளர் ஊதிய உயர்வு ஒப்பந்தம் கையெழுத்து!

### மு.சண்முகம் எம்.பி., தொழிற்சங்க நிர்வாகிகள் பங்கேற்பு!

சென்னை, நவ.29- தமிழக அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் மிக வும் சிறப்பாக செயல்பட்டு வரும், தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தின், 10-வது தொழிலாளர் ஊதிய உயர்வு ஒப்பந்தம் (2022-2026) 27.11.2023 அன்று, தொழில்துறை, முத லீட்டு ஊக்குவிப்பு மற்றும் வணிகம் அமைச்சர் முனை வர் டி.ஆர்.பி.ராஜா தலை மையிலும், தமிழ்நாடு செய் தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற் றும் மேலாண்மை இயக்கு நர் முனைவர் எம்.சாய்கு மார் முன்னிலையிலும் மற்றும் எம்.சண்முகம், பாராளுமன்ற உறுப்பினர், பொதுச் செயலாளர், தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை, ஆர்.கமலக் கண்ணன், செயலாளர், அண்ணா தொழிற் சங்க பேரவை மற்றும் டி.கே.ரங் கராஜன், முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினர், கௌரவ ஆலோசகர், டி.என்.பி.எல். தொழிலா ளர் சங்கம் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின்படி மூன்று தொழிற்சங்கங்க ளும் ஒருமித்த கருத்துடன் ஊதிய உயர்வு ஒப்பந்தத் தில் கையெழுத்திட்டனர்.

வரலாற்று சிறப்பு மிக்க ஊதிய உயர்வு ஒப்பந்தம் சிறப்பம்சங்கள் வருமாறு:-

1. அடிப்படைச் சம்ப ளத்தில் 30 சதவீதம் உயர்த்தி, திருத்தியமைக்கப் பட்ட ஊதியம் நிர்ணயிக்கப் பட்டது.

2. வருடாந்திர ஊதிய உயர்வு, அடிப்படைச் சம்ப ளத்தில் 3 சதவீதமாக நிர்ண யிக்கப்பட்டது.

3. மாறும் அகவிலைப் படி 0.29 சதவீதமாகவும், அதன் உச்சவரம்பு ரூ.63/ ஆக உயர்த்தப்பட்டது.

4. 2015-ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்த தொழிலா ளர்களுக்கும் மாறா அகவி லைப்படி(FDA) வழங்கப்ப டும்.

5. வீட்டு வாடகைப்படி, ஆலைக் குடியிருப்பில் உள்ள பணியாளர்களுக்கு 12 சதவீதமாகவும், ஆலைக் குடியிருப்பில் இல்லாத பணியாளர்களுக்கு 15 சதவீ தமாகவும் நிர்ணயம் செய் யப்பட்டது.

6. அனைத்து (கொடுப்ப னவுகள்) அலவன்ஸ்களிலும் சென்ற 9 ஒப்பந்தங்களை காட்டிலும் நல்ல உயர்வு நிர்ணயிக்கப்பட்டது.

7. தொழிலாளர்களுக்கு 100% ஈடுசெய்யப்படும் தீவிர நோய்களின் பட்டிய லில் கல்லீரல் மற்றும் கணைய நோய்களும் சேர்க் கப்பட்டுள்ளன.

8. பெண் ஊழியர்க ளுக்கு கொடுக்கப்படும் பேறு கால விடுப்பு, LTC விடுமுறை கணக்கிடுதலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

9. 33 வருடம் நிறைவு செய்தவர்களுக்கு சர்வீஸ் வெயிட்டேஜ் கொடுக்கப்ப டும்.

10. பணி உயர்வில் 4,5 மற்றும் 6வது கிரேடுகளில் 3 ஆண்டுகள் தளர்வு, கொடுக்க நிர்ணயிக்கப் பட்டது.

11. பட்டம் படித்து வேலையில் சேர்ந்து, 20 ஆண்டுகள் பணி செய்தவர் களுக்கு 1 படிநிலை பணி உயர்வு கொடுக்க நிர்ணயம் செய்யப்பட்டது.

12. ஆலையில் பணிபுரி யும் தொழிலாளர்கள் பணிக் காலத்தில் இறக்க நேரிட்டால் (விபத்து மற் றும் இயற்கை மரணம்) அவர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்ப டும்.

தொழில்துறை, முத லீட்டு ஊக்குவிப்பு மற்றும் வணிகம் அமைச்சர் அவர்க ளின் சிறப்புரையில், ஒப் பந்த தொழிலாளர்களின் பல ஆண்டு கால கோரிக் கையான, ஒப்பந்த தொழி லாளர்களை பணி நிரந்தரப்படுத்துதல் என்பது தமிழக அரசின் முதல்வரின் ஆணையின்படி, 600 தொழி லாளர்களுக்கு நிரந்தரப் பணி ஆணை வழங்கப்பட் டது என்று குறிப்பிட்டார். மேலும், சுமார் 4000 ஒப் பந்த தொழிலாளர்களுக்கு மதிய உணவு வழங்கும் அறி விப்பும் வெளியிடப் பட்டது.

இந்நிகழ்வில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவ னத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்)/பொறுப்பு ஆர். சீனிவாசன், முதன்மை பொது மேலாளர்(நிதி) திரு மதி.சத்யா ஆனந்த், மனித வளத்துறை பொது மேலா ளர் கா.கலைச்செல்வன் மற் றும் மனிதவளத்துறை & நிதித்துறையைச் சார்ந்த அதிகாரிகள் உடனிருந் தனர்.



டின்பிஎல் 10-வது தொழிலாளர் ஊதிய உயர்வு ஒப்பந்தம் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் கையெழுத்தானது.

## டிஎன்பிஎல் தொழிலாளர் ஊதிய உயர்வு ஒப்பந்தம்

### அமைச்சர் தலைமையில் கையெழுத்து

**சென்னை**

தமிழக அரசின் பொதுத் துறை நிறுவனமான தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தின் (டிஎன் பிஎல்) 10-வது தொழிலாளர் ஊதிய உயர்வு ஒப்பந்தம் (2022-26) நேற்று (நவ. 27) தொழில்துறை, முத லீடு ஊக்குவிப்பு மற்றும் வணிக அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலை மையில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் எம். சாய்குமார் முன்னிலையில் கையெழுத்தானது.

இதில் நாடாளுமன்ற உறுப்பி னர் மற்றும் தொழிலாளர் முன் னேற்ற சங்கப் பேரவை பொதுச் செயலாளர் எம்.சண்முகம், அண்ணா தொழிற்சங்க பேரவை செயலாளர் ஆர்.கமலக்கண்ணன், முன்னாள் எம்பி மற்றும் டிஎன்பிஎல் தொழிலாளர் சங்க கவுரவ ஆலோசகர் டி.கே.ரங்கராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஊதிய உயர்வு ஒப்பந்த சிறப் பம்சங்கள்: அடிப்படை ஊதியத்தில் 30 சதவீதம் உயர்த்தி, திருத்திய மைக்கப்பட்ட ஊதியம் நிர்ணயிக் கப்பட்டது. வருடாந்திர ஊதிய உயர்வு, அடிப்படைச் சம்பளத்தில் 3 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டது. மாறும் அகவிலைப்படி 0.29 சதவீதமாகவும், அதன் உச்சவரம்பு ரூ.63 ஆகவும் உயர்த்தப்பட்டது. 2015-ம் ஆண்டில் பணியில் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் மாறா அக விலைப்படி (FDA) வழங்கப்படும்.

வீட்டு வாடகைப்படி, ஆலைக் குடியிருப்பில் உள்ள பணியாளர்க ளுக்கு 12 சதவீதமாகவும், ஆலைக் குடியிருப்பில் இல்லாத பணியாளர் களுக்கு 15 சதவீதமாகவும் நிர்ண யம் செய்யப்பட்டது. அனைத்து கொடுப்பனவுகளிலும் கடந்த 9 ஒப்பந்தங்களை காட்டிலும் நல்ல உயர்வு நிர்ணயிக்கப்பட்டது.

பெண் ஊழியர்களுக்கு கொடுக் கப்படும் பேறுகால விடுப்பு, எல்டிசி விடுமுறை கணக்கிடுதலுக்கு எடுத்துக்கொள்ளப்படும். 33 ஆண்டு நிறைவு செய்தவர்களுக்கு சர்வீஸ் வெயிட்டேஜ் கொடுக்கப் படும். ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் பணிக் காலத்தில் இறக்க நேரிட்டால் (விபத்து மற்றும் இயற்கை மரணம்) அவர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

இந்நிகழ்வில், டிஎன்பிஎல் செயல் இயக்குநர் (இயக்கம்) - பொறுப்பு ஆர்.சீனிவாசன், முதன்மை பொது மேலாளர் (நிதி) சத்யா ஆனந்த், மனிதவளத் துறை பொது மேலாளர் கா.கலைச் செல்வன் உள்ளிட்டோர் உடனிருந் தனர்.

Hindu Tamil - 28-11-2023